# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092371

1. District மாவட்டம் : தூத்துக்குடி
   PS: காவல் நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி
   Year ஆண்டு 2019
   FIR No.: மு.த.அ. எண் 07/2019
   Date நாள் 16.07.2019

2. (i) Act சட்டம்: Cr.P.C — Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: PC Act 1988 as Amended by the PC (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7 and 12
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 15.07.2019
   Date to : நாள் வரை --
   Time Period நேர அளவு : 15.07.2019 ம் தேதி இரவு 19.30 மணிக்கு முன்
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
   Time : நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.07.2019 / 16.07.2019
   Time நேரம் : 07.00 மணி / 07.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சார்பதிவாளர் அலுவலகம், புதுக்கோட்டை சுமார் 5 கி.மீ வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் -
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு.இரா.ரகு
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — வட்டாட்சியர்
   (g) Address முகவரி — நில எடுப்பு, தூத்துக்குடி – வாஞ்சி மணியாச்சி, புதிய சாலை திட்டம், தூத்துக்குடி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1.) திரு.எஸ்.பரமார்த்தலிங்கம், சார்பதிவாளர், புதுக்கோட்டை (2.) திருமதி.எம்.மாரி, வில்லங்கசான்று பிரிவு உதவியாளர், (3.) திரு.பொக்கிராஜ், அலுவலக உதவியாளர், (4.) திரு.எஸ்மாரியப்பன், அலுவலக உதவியாளர், (5.) திரு.சே.தாமஜ் ராஜா, த-பெ செல்வராஜ், (6.) திரு.பா.உதயகுமார், த-பெ பால்பாண்டி, (7.) திரு.அ.அழகு முத்துகிருஷ்ணன், த-பெ அனவரதம்பிள்ளை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாளில் இண்ணக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr.A.Annamalai Rank Inspr. ...... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ...on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...... ........ பதவி ........ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........ ... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.07.2019

Name: பெயர் திரு.ஜா.ஹெக்டர் தர்மராஜ்.
Rank: நிலை ........ ......No. எண் ........
காவல் துணை கண்காணிப்பாளர்
ஊ.த.(ம): க.துறை,
தூத்துக்குடி 16.07.2019.

**தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 07/2019. பிரிவு 102 Cr.P.C மற்றும் பிரிவு 7, 12 of PC Act 1988 as Amended by the PC (Amendment) Act 2018.**

**Accused :**

1. Tr.S.Paramarthalingam,
   S/o Tr.A.Subbiah Pillai,
   Sub Registrar,
   Pudukottai Sub-Registry,
   Thoothukudi District.

2. Tmt.M.Mari,
   W/o Ramalingam,
   Encumbrance certificate section
   Assistant, Pudukottai Sub-Registry,
   Thoothukudi District.

3. Tr.S.Pokkiraj,
   S/o.Tr.Subbiah,
   Office Assistant,
   Pudukottai Sub- Registry,
   Thoothukudi District.

4. Tr.S.Mariappan,
   S/o Tr.M.Shanmugam,
   Office Assistant,
   Pudukottai Sub-Registry,
   Thoothukudi District.

**Private Individual :**

5. Tr.S.Thomas Raja,
   S/o Selvaraj,
   No.31/5, Rajamaniyapuram,
   Arumuganeri,
   Thoothukudi District.

6. Tr.P.Udhayakumar,
   S/o.Tr.Palpandi,
   No.7/94, East Street,
   Kulayankarisal,
   Thoothukudi District.

7. Tr.A.Alagu Muthukrishnan,
   S/o.Tr.Anavaratham Pillai,
   No.3, 802-28, Vigneshwara nagar,
   Pudukottai, Thoothukudi District.

**பணிந்தனுப்பப்படுகிறது :-**

தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்து சார்பதிவாளரும், சார்பதிவக அலுவலர்களும், சார்பதிவாளர் நியமித்துள்ள கார் டிரைவர் மற்றும் பத்திர எழுத்தர்கள் மூலமாக பத்திரங்கள் பதிவு செய்வதற்கும், பத்திர பதிவு சம்பந்தமான பணிகள் மேற்கொள்வதற்கும் லஞ்சமாக பணம் பெற்று வருவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் 15.07.2019-ம் தேதி 19.30 மணி முதல் இரவு 23.10 மணி வரை தனி வட்டாட்சியர் / துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.இரா.ரகு அவர்களுடன் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் தனி வட்டாட்சியர் / துணை ஆய்வுக் குழு அலுவலர் திரு.இரா.ரகு அவர்கள் கொடுத்த புகார் மனுவை 16.07.2019-ம் தேதி காலை 07.00 மணிக்கு பெற்று இன்று (16.07.2019) காலை 08.00 மணிக்கு நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 07/2019, பிரிவு 102 Cr.P.C மற்றும் பிரிவு 7, 12 of PC Act

1988 as Amended by the PC (Amendment) Act 2018 –ன் படி மார்ஜினில் கண்ட ஏழு எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர், இரா.ரகு, தனி வட்டாட்சியர், நில எடுப்பு, தூத்துக்குடி – வாஞ்சி மணியாச்சி புதிய சாலை திட்டம், தூத்துக்குடி. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. தூத்துக்குடி மாவட்டம் புதுக்கோட்டை கிராமத்தில் உள்ள பத்திர பதிவு அலுவலகத்தில் எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர், மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் ரகசியமாக 15.07.2019-ம் தேதி மாலை 18.30 மணி முதல் 19.30 மணி வரை கண்காணித்ததில் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப் பதிவிற்கு வரும் பொதுமக்களிடமிருந்து சார்பதிவாளர் நியமித்துள்ள டிரைவர் மற்றும் பத்திர எழுத்தர்கள் மூலமாக பத்திரங்கள் பதிவு செய்வதற்கும், பத்திரப் பதிவு சம்பந்தமான ஆவணங்கள் வழங்குதல் மற்றும் இதர அலுவல்கள் செய்வதற்கும் லஞ்சமாக பணம் பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 15.07.2019 மாலை 19.30 மணி முதல் புதுக்கோட்டை ஊருக்குள் இருந்து திருநெல்வேலி செல்லும் ரோட்டில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கட்டிட மாடியில் அமைந்துள்ள மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தை தணிக்கை செய்ததில் அலுவலகத்தின் கண்ணாடி அறையில் மேற்கு பக்கத்தில் இருந்த திருமதி.மு.முத்துமாரி, க-பெ ராமலிங்கம், உதவியாளர், புதுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகம் என்பவரிடம் ரூ.900/-ம், மேற்படி அலுவலகத்தில் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரில் உள்ள சேரில் அமர்ந்திருந்த சார்பதிவாளர் திரு.பராமார்த்தலிங்கத்தின் சொந்தக் கார் (TN 67 AX 8165) ஓட்டுநர் திரு.எஸ்.தாமஸ் ராஜா, வயது 44, த-பெ செல்வராஜ், எண்.31/5, இராஜமணியாபுரம், ஆறுமுகநேரி என்பவரிடமிருந்து வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்த ரூ.15,500/-ம், மணி பர்ஸிலிருந்து ரூ.1,450/-ம் ஆக மொத்தம் ரூ.16,950/-ம் மணி பர்ஸில் மடித்து வைக்கப்பட்டிருந்த சில குறிப்புகளுடன் காணப்பட்ட சிறிய வெள்ளைப் பேப்பரும், மேற்படி சார் பதிவாளர் அறையில் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரில் நின்று கொண்டிருந்த பத்திர எழுத்தர் திரு.பி.உதயகுமார், த-பெ பால்பாண்டி, 7-94, கிழக்கு தெரு, குலையன்கரிசல், தூத்துக்குடி என்பவருடைய பேண்ட் பின்புற வலது பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணம் ரூ.25,500/-ம், சார்பதிவாளர் இருக்கையின் முன்புறம் உள்ள போட்டோ எடுக்கும் டேபிளின் எதிர்புறம் நின்று கொண்டிருந்தவரும் பத்திர எழுத்தர் திருமதி.சொர்ணம் என்பவரின் தம்பியுமான திரு.எ.அழகு முத்துகிருஷ்ணன், வயது 44, த-பெ திரு.வி.அனவரதம்பிள்ளை எண்.3, 802-28, விக்னேஷ்வரா நகர், புதுக்கோட்டை என்பவரிடமிருந்து வலது பக்க பேண்ட்

பாக்கெட்டிலிருந்த பணம் ரூ.25,840/-ம், சார் பதிவாளர் இருக்கையின் இடதுபுறம் நின்று கொண்டிருந்த அலுவலக உதவியாளர் திரு.பொக்கிராஜ் என்பவரின் முன்பக்க சட்டைப் பையில் இருந்த பணம் ரூ.2,210/-ம், சார்பதிவாளர் இருக்கைக்கு இடது பக்கத்தில் நின்று கொண்டிருந்த அலுவலக உதவியாளர் திரு.எஸ்.மாரியப்பன் என்பவரின் முன் பக்க சட்டைப் பையிலிருந்து ரூ.370/-ம், சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பதிவறையில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஸ்டீல் பீரோவின் இரண்டாவது தட்டில் ரிஜிஸ்தருக்கு அடியில் இருந்த உரிமை கோரப்படாத பணம் ரூ.900/-ம், மேற்படி அலுவலகத்தில் சார்பதிவாளர் மேஜையின் மேலிருந்த STATE BANK OF INDIA TIRUNELVELI TOWN என்று எழுதப்பட்டிருந்த சார்பதிவாளர் திரு.பரமார்த்தலிங்கத்தின் கருப்பு நிற ரெக்ஸின் பேக்கில் இருந்த பணம் ரூ.6,820/-ம் ஆக மொத்தம் ரூ.79,490/- இருந்தது. மேற்படி பணத்திற்கு அவர்களிடம் உரிய விளக்கம் கேட்க அவர்களின் விளக்கம் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் இல்லாததாலும், மேற்படி பணம் பத்திரம் பதிவு செய்வதற்காகவும், பதிவு சம்பந்தமான பணிகளுக்காக கையூட்டாக பெற்ற பணம் என்று சந்தேகப்படும்படியாக இருந்ததாலும் 15.07.2019 மாலை 19.30 மணி முதல் இரவு 11.10 மணி வரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு 1 முதல் 8-ன் படியும் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் அலுவலக பணியாளர்கள் மற்றும் தனி நபர்களிடம் சந்தேகப்படும்படியாக இருந்ததால் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டு இத்துடன் செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.79,490/- மற்றும் பின் இணைப்பு 1 முதல் 8 வரையும், கருப்பு நிற ரெக்ஸின் பேக், சில புல எண் குறிப்புகளுடன் காணப்பட்ட துண்டுச் சீட்டு, கிரைய ஆவண எண்.5766/2008, நாள் 29.09.2008 –ன் கலர் ஜெராக்ஸ், புதுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக தனி நபர் பண இருப்பு பதிவேடு (15.07.2019 வரை எழுதப்பட்டது) ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். Sd/- இரா.ரகு, 16.07.2019, துணை ஆய்வுக் குழு அலுவலர் / தனி வட்டாட்சியர், (நி.எ), தூத்துக்குடி – வாஞ்சி மணியாச்சி புதிய சாலை திட்டம், தூத்துக்குடி. Sir, Received the complaint on 16.07.2019 at 07.00 hrs, I am registering a case in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.07/2019, u/s 102 Cr.P.C and 7, 12 of Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 today (16.07.2019) at 08.00 hrs Sd/- G.Hector Dharma Raj, Deputy Supdt. of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.இரா.ரகு அவர்களின் அசல் புகார் மனு மற்றும் புதுக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு – 1 முதல் 8 வரை உள்ளதை

இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக ஆய்வாளர் திரு.ஆ.அண்ணாமலை, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைத்தேன்.

(ஜா.ஹெக்டர் தர்மராஜ்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
தூத்துக்குடி பிரிவு. 16.07.2019.